# காப்பியங்கள்

உலகில் உள்ள பழமையான மொழிகளில் இதிகாசங்களும் காப்பியங்களும் தோன்றியுள்ளன. இந்தியாவில் வட மொழியில் (சமஸ்கிருதம்) எழுதப்பட்ட இதிகாசங்கள் ராமாயணம், மகாபாரதம். தமிழ் மொழியில் எழுதப்பட்ட இதிகாசங்கள் கம்ப ராமாயணம், வில்லிபாரதம். கிரேக்க மொழியில் எழுதப்பட்ட இதிகாசங்கள் ஹோமரின் இலியட், ஒடிசி. தமிழில் எழுதப்பட்ட முதல் இருகாப்பியங்கள் சிலப்பதிகாரம், மணிமேகலை. இரு காப்பியங்களுமே பெண்ணுக்கு முதன்மை தருகின்றன. பிற மொழி இதிகாசங்கள் போரினை முதன்மைப்படுத்தின. தமிழ் காப்பியங்கள் போருக்கு முதன்மை கொடுக்கவில்லை.

## ஐம்பெருங்காப்பியங்கள்

பழந்தமிழ் இலக்கியங்களின் தொகுப்பில் அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கு வகை உறுதிப்பொருள்களும் அமைந்து காணப்படுவன ஐம்பெருங்காப்பியங்கள் ஆகும்.

| நூல் | நூலாசிரியர் |
|---|---|
| சிலப்பதிகாரம் | இளங்கோவடிகள் |
| மணிமேகலை | சீத்தலை சாத்தனார் |
| சீவக சிந்தாமணி | திருத்தக்க தேவர் |
| வளையாபதி | அறியப்படவில்லை |
| குண்டலகேசி | நாக குத்தனார். |

⇒ 'பொருட்தொடர்நிலைச் செய்யுள்' காப்பியம் எனப்படும்.

⇒ காப்பிய இலக்கணம் குறித்து கூறும் நூல் தண்டியலங்காரமாகும்.

⇒ 'ஐம்பெருங்காப்பியங்கள்' என்ற சொற்றொடரை முதன்முதலில் கூறியவர் மயிலை நாதர்.

⇒ ஐம்பெருங்காப்பியங்களில் நூல் பெயர்களை முதன் முதலாக குறிப்பிட்டவர் கந்தப்ப தேசிகர்.

**காதொளிரும் குண்டலமும் கைக்கு வளையாபதியும் கருணை மார்பின்**
**மீதொளிர் சிந்தாமணியும் மெல்லிடையில் மேகலையும் சிலம்பார் இன்பப்**
**போதொளிரும் திருவடியும் பொன்முடி சூளாமணியும் பொலியச் சூடி**
**நீதியொளிர் செங்கோலாய்த் திருக்குறளைத் தாங்கு தமிழ் நீடுவாழ்க**

**-யோகி சுத்தானந்த பாரதி**

### ஐம்பெருங்காப்பியங்கள்

| நூல் | சமயம் | பாவகை |
|---|---|---|
| சிலப்பதிகாரம் | சமணம் | நிலைமண்டல ஆசிரியப்பா, கொச்சகக் கலிப்பா |
| மணிமேகலை | பௌத்தம் | நிலைமண்டலி ஆசிரியப்பா |
| சீவக சிந்தாமணி | சமணம் | விருத்தம் |
| வளையாபதி | சமணம் | விருத்தம் |
| குண்டலகேசி | பௌத்தம் | விருத்தம் |

➢ சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி தமிழில் தோன்றியுள்ள காப்பியங்கள்.

**உரைகள்**
- ➢ அரும்பதங்களுக்கு மட்டும் அரும்பத உரைகாரர்
- ➢ அடியார்க்கு நல்லாரின் உரை
- ➢ ந.மு.வேங்கடசாமி நாட்டார் உரை

சிலப்பதிகாரம், மணிமேகலை மற்றும் பெரியபுராணம் மட்டுமே. தமிழ்நாட்டு கதைகளை மூலக்கருவாக கொண்டு ஏற்றப்பட்டுள்ளன. ஏனையவை வடமொழிகளின் தழுவல்களாகவோ அல்லது தமிழாக்கங்களாகவோ அமைந்துள்ளன. ஐம்பெரும் காப்பியங்களின் பெயர்கள் அணிகலன்களின் பெயரால் அமைந்துள்ளன.

**ஐம்பெருங்காப்பியம் முறை வைப்பு**

"சிந்தா மணியாம் சிலப்பதிகா ரம்படைத்தான்
கந்தா மணிமே கலைபுனைந்தான் – நந்தா
வளையா பதிதருவான் வாசவனுக் கீந்தான்
திளையாத குண்டலுகே சிக்கும்" -
**திருத்தணிகையுலா**

➢ **சிலப்பதிகாரம்:** 'சிலம்பு' என்பது மகளிர் காலில் அணியும் ஆபரணம். கண்ணகியின் சிலம்பால் உருவான வரலாறு ஆகும்.

➢ **மணிமேகலை:** ஆடை நழுவாமல் இருக்க மகளிர் இடுப்பில் அணியும் அணி.


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

இத்தொடர் அன்மொழித்தொகையாக அதனை அணிந்தப் பெண்ணை உணர்த்தும்.

- **குண்டலகேசி:** குண்டலம் என்பது மகளிர் காதில் அணியும் அணி. (கேசி) என்றால் அழகான கூந்தலை (கேசம்) உடையவள்.
- **வளையாபதி:** வளையல் என்பது பெண்கள் கைகளில் அணியும் அணி. வளையாபதியின் வரலாற்றை கூறும் நூல்.
- **சீவகசிந்தாமணி:** சிந்தாமணி என்பது அரசன் முடியில் (கிரீடத்தில்) பதிக்கப்படும் மணிக்கல் சீவகனை மணி முடியாக்கி எழுதப்பட்ட வரலாறு.
- இரட்டைக் காப்பியங்களான சிலப்பதிகாரமும், மணிமேகலையும் சங்கம் மருவிய காலத்தில் தோன்றியவை. ஏனையவை சோழர் காலத்தில் தோன்றியவை ஆகும்.

## 1. சிலப்பதிகாரம்

சிலம்பு + அதிகாரம் – சிலப்பதிகாரம் கண்ணகியின் சிலம்பால் விழுந்த நிகழ்வை முதன்மையாகக் கொண்டதால் சிலப்பதிகாரம் என்று பெயர் பெற்றது.

**நூல் அமைப்பு**

| | |
|---|---|
| **காண்டங்கள்** | மூன்று (புகார் காண்டம், மதுரை காண்டம், வஞ்சி காண்டம்) |
| **காதைகள்** | 30 |
| **புகார் காண்டம்** | 10 கதைகள் |
| **மதுரை காண்டம்** | 13 கதைகள் |
| **வஞ்சி காண்டம்** | 7 காதைகள் |
| **அடிகள்** | 5001 |

- ‘காதை’ என்றால் கதை தழுவிய பாட்டு என்று பொருளாகும்.
- பாவகை நிலைமண்டிலி ஆசிரியப்பா

**1) புகார்க்காண்டம்**

- முதல் காதை மங்கல வாழ்த்து பாடல்
- பத்தாவது காதை நாடு கான் கதை

**2) மதுரைக்காண்டம்**

- 11ஆவது காதை காடு கான் காதை
- 23வது காதை கட்டுரை காதை

**3) வஞ்சிக்காண்டம்**

- 24 ஆவது காதை குன்று குறவை காதை
- முப்பதாவது காதை வரும் தரும் காதை

**காப்பியம் தோன்றிய காலம் :**

கி.பி. இரண்டாம் நூற்றாண்டு. சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்கு கோயில் எடுத்து விழா கொண்டாடிய போது இலங்கை மன்னன் கயவாக உடன் இருந்தான் என்பதை இளங்கோவடிகள் வரந்தரு காதையில் கூறியுள்ளார். கயவாகும் மன்னனின் ஆட்சி கி.பி. இரண்டாம் நூற்றாண்டு என இலங்கை சரித்திரமாகிய மகாவம்சம் கூறுகிறது.

**சிலப்பதிகாரத்தின் வேறு பெயர்கள்:**

1. **முத்தமிழ் காப்பியம்:** இயல், இசை, நாடகம் என்கிற முத்தமிழும் விரவி பெற்றதால் இப்பெயர் பெற்றது.
2. **உரையிடப்பட்டப் பாட்டுடைச் செய்யுள்:** பாடல்களின் இடையிடையே உரைநடையும் அமைந்திருப்பதால் இப்பெயர் பெற்றது.
3. **இயல், இசை, நாடக பொருள் தொடர்நிலை செய்யுள்:** இசை, நாடக வெண்பாக்கள் நிறைந்து வருவதால் இப்பெயர் பெற்றது.
4. **குடிமக்கள்காப்பியம்:** சிலப்பதிகார தலைவனும் தலைவியும் சாதாரண குடிமக்கள் என்பதால் இப்பெயர் பெற்றது கூறியவர் தெ.பொ. மீ.
5. **ஒற்றுமைகாப்பியம்:** தமிழின ஒற்றுமையையும், சமய ஒற்றுமையையும் வலியுறுத்துவதால் இப்பெயர் பெற்றது.
6. **சிலப்பதிகாரம்:** சிலப்பதிகாரம் என்பதை உ.வே.சா.



TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

சிலப்பதிகாரம் என மாற்றினார். பைந்தமிழ் காப்பியம், மூவேந்தர் காப்பியம், பத்தினி காப்பியம், முதன்மை காப்பியம், தமிழ் தேசிய காப்பியம்.

**நூல் தோன்றக் காரணம் :**

- சேரன் செங்குட்டவன், புலவர் சீத்தலை சாத்தனாரோடும், இளங்கோவடிகளோடும் மலைவளம் காண வந்தான்.
- அங்கு வாழ்ந்த மலைவாழ் மக்கள் அங்கிருந்த வேங்கை மரத்தின் கீழ் ஒரு பெண் தெய்வத்தை பார்த்ததாக கூறினர்.
- மேலும் தேவர்கள் சூழ்ந்து வர, விண்ணிலிருந்து ஒரு விமானம் இறங்கி வந்து அவளை விண்ணுலகு அழைத்துச் சென்றதாகவும், அதை தன் கண்களால் கண்டதாகவும் அம்மக்கள் கூறினர்.
- உடன் இருந்த பெரும் புலவர் சீத்தலை சாத்தனார் 'அப்பெண்ணின் வரலாற்றை யாணறிவேன்' என்று கோவலன், கண்ணகி வரலாற்றை சுருக்கமாக கூறினார்.
- கண்ணகியின் வரலாற்றை நன்கு அறிந்த சீத்தலை சாத்தனார் "அப்பெண்ணின் வரலாற்றை யாணறிவேன் என்று இளங்கோவடிகளிடம் கூறியதுடன் அதனை காப்பியமாக ஏற்றும்படி அடிகள் நீரே அருளுக" என்று இளங்கோவடிகளிடம் கூறினார்.
- இளங்கோவடிகள் 'நாட்டுதும் யாம் ஓர் பாட்டுடைச் செய்யுள்' என்று சிலப்பதிகாரத்தை இயற்றினார்.

**"முடி கெழு வேந்தர் மூவர்க்கும் உரியது அடிகள் நீரே யருளுகென் நாற்கவர்"**

- "இவ்வரலாறு தமிழ்நாட்டு முடியுடை வேந்தர் மூவருக்கும் உரியது. எனவே முற்றும் துறந்த அடிகளாகிய நீங்களே தான் செய்தருள வேண்டும்" என்றார் சீத்தலை சாத்தனார்.

**நூலின் சிறப்புகள்**

- இஃது ஐம்பெருங்காப்பியங்களில் முதன்மையானதும் தமிழிலேயே முதன்முதலாக இயற்றப்பட்ட காப்பியம் சிலப்பதிகாரம் ஆகும்.
- இந்நூலின் சிறப்பு மூன்று ஆகும்.
- சேர, சோழ, பாண்டியன் என்ற மூவேந்தர்களின் சிறப்பு.
- புகார், மதுரை, வஞ்சி என்ற மூன்று நகரங்களின் சிறப்பு.
- ஞாயிறு, திங்கள்,மழை என்ற மூன்று இயற்கை தெய்வங்களின் சிறப்பு.
- செங்கோலின் சிறப்பு, கற்பின் மேம்பாடு, ஊழ்வினைப் பயன் என்ற மூன்று உண்மைகள்.
- இந்நூல் மூலமாக தமிழகத்தை ஆண்ட மூவேந்தர்களின் பெருமைகளையும், பண்டைத் தமிழரின் அரசியலையும், பழக்க வழக்கங்களையும், நாகரிகங்களையும் அறிந்து கொள்ள முடிகிறது.

**நூல் உணர்த்தும் உண்மைகள்**

1. அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்.
2. உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர்.
3. ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டும்.
   - முதல் உண்மை அரசியலில் பிழை செய்த மன்னனை குறிக்கிறது.
   - இரண்டாம் உண்மை கண்ணகியை குறிக்கிறது.
   - மூன்றாம் உண்மை கோவலனை குறிக்கிறது.

**முக்கிய கதாபாத்திரங்கள்:**

- கோவலனின் தந்தை – மாசாத்துவன்; கண்ணகியின் தந்தை – மாநாய்கன்
- கோவலனின் தோழன் – மாடலன்; கண்ணகியின் தோழி – தேவந்தி
- மாதவியின் தோழி – சுதமதி , வயந்த மாலை


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

- கோவலன், கண்ணகியை வழி நடத்திச் சென்ற கவுந்தியடிகள்.
- கோவலன், கண்ணகி மதுரையில் அடைக்கலம் கொடுத்த மாதரி.

**மேற்கோள்கள்**

- "மாசறு பொன்னே, வலம்புரி முத்தே காசறு விரையே கரும்பே தேனே"
- "பஃறுளி யாற்றுடன் பன்மலை அடுக்கத்துக் குமாரி கோடும் கொடுங்கடல் கொள்ள"
- 'காய் கதிர் செல்வனே! கள்வனோ என் கணவன் ?
- தேரா மன்னா ! செப்புவது உடையேன் ;
- "கன்றிய கள்வன் கையது ஆகின், கொன்று அச்சிலம்பு கொணர்க ஈங்கு"

**பாராட்டுரைகள்**

- ✓ 'நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்' – என்றோர் மணியாரம் படைத்த தமிழ்நாடு.
  **- பாரதியார்**
- ✓ யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல் வள்ளுவனைப் போல் இளங்கோவை போல் பூமித்தனில் யாங்கணுமே பிறந்ததில்லை.
  **- பாரதியார்**
- ✓ முதன் முதலாக தமிழ் மக்கள் எல்லோரையும் ஒருங்கே காணும் நெறியில் நின்று நூல் செய்தவர் இளங்கோவடிகள்.
  **- மு.வரதராசனார்**
- ✓ "தேனிலே ஊறிய செந்தமிழன் சுவை தேறும் சிலப்பதிகாரம்"
  **- கவிமணி**

**நூலாசிரியர் பற்றிய வாழ்க்கை குறிப்பு:**

| | |
|---|---|
| **நூலாசிரியர்** | இளங்கோவடிகள் |
| **இயற்பெயர்** | குடக்கோ சேரல் |
| **நாடு** | சேர நாடு |
| **தந்தை** | இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் |
| **தாய்** | நற்சோணை (சோழநாட்டு இளவரசி) |
| **தமையன்** | சேரன்செங்குட்டுவன் |
| **சமயம்** | சமணம் (அவர் ஏற்றுக்கொண்ட மதம்) |
| **காலம்** | கி.பி. இரண்டாம் நூற்றாண்டு |
| **சமக்காலப்புலவர்** | மணிமேகலையின் ஆசிரியரான சீத்தலை சாத்தனார் |

இளையவரான இளங்கோவே நாடாள்வார் என கணியன் (சோதிடன்) கூறிய கருத்தை பொய்யாக்கும் வண்ணம், இளங்கோ இளமையிலே துறவு பூண்டு குணவாய் கோட்டத்தில் தங்கினார்.

**நூலாசிரியரின் சிறப்புகள்**

- இவர் அரசியல் வேறுபாடு கருதாதவர். சேர நாட்டை சேர்ந்தவராயினும் சோழ, பாண்டிய மன்னர்களை தன் நூலில் உயர்த்தி கூறியுள்ளார்.
- இவர் சமய வேறுபாடற்ற துறவி. இவர் சமண மதத்தை சார்ந்திருந்தாலும் பிற மதங்களை பழித்து கூறாதது இவருடைய சிறப்பாகும்.
- இளமையிலே துறவு பூண்டமையால் தம் தமையனிடம் அவர் கொண்டிருந்த பேரன்பும், அரச பதவி மீதி இருந்த பற்றற்ற தன்மையும் விளங்குகிறது.

## 2. மணிமேகலை

- மணிமேகலை ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றாகும். கோவலன் – மாதவி ஆகியோரின் மகளாகிய மணிமேகலையின் வரலாற்றை கூறும் காப்பியம் ஆதலால் இப்பெயர் பெற்றது.
- மணிமேகலையும், சிலப்பதிகாரமும் வெவ்வேறு நூல்களாயினும் ஒரே கதை தொடர்புடையன எனவே இவை 'இரட்டைக் காப்பியங்கள்' என வழங்கப்படுகின்றன.

**நூல் குறிப்பு :**

- இந்நூலில் காண்டப்பிரிவு இல்லை.
- 30 காதைகள் மட்டுமே உள்ளன.
- முதல் காதை – விழாவறைக் காதை



TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

- இறுதிக்காதை – பவத்திறம் அறுக எனப் பாவை நோற்ற காதை
- அடிகள் – 4755
- பாவகை – நிலைமண்டியில ஆசிரியப்பா
- சமயம் – பௌத்தம்

**நூலின் வேறு பெயர்கள்**

- மணிமேகலைத் துறவு
- அறக்காப்பியம்
- சீர்திருத்தக் காப்பியம்
- குறிக்கோள் காப்பியம்
- முதல் சமயக் காப்பியம்
- புரட்சிக் காப்பியம்
- பசிப்பிணி மருத்துவக் காப்பியம்
- சமயக்கலை சொல்லாக்கக் காப்பியம்
- கதை களஞ்சியக் காப்பியம்

**முக்கிய கதாபாத்திரங்கள்**

- மணிமேகலையின் தோழி - **சுதமதி**
- புத்த துறவி -**அறவணடிகள்**
- மணிமேகலைக்கு முதன்முதலாக அமுதசுரபியில் பிச்சை இட்ட – **ஆதிரை, காயசண்டிகை**
- மணிமேகலை அமுதசுரபியைப் பெற உதவிய – **தீவதிலகை**

**மேற்கோள்கள்**

- ‘வினையின் வந்தது வினைக்கு விளைவாது புனைவன நீக்கின் புலால் புறத்து இடுவது மூப்பு விளி உடையது தீப்பிணி இருக்கை’
- ‘கோள்நிலை திரிந்திடின் கோள்நிலை திரியும் கோள்நிலை திரிந்திடின் மாரிவளம் குன்றும்’
- ‘பசிப்பிணி என்னும் பாவி’
- ‘மண்திணி ஞாலத்து வாழ்க்கைக் கெல்லாம் உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே’
- ‘இளமையும் நில்லா யாக்கையும் நில்லா’
- ‘அறம் எனப்படுவது யாதெனக் கேட்பின் மறவாது இதுகேள்;
- மன்னுயிர்க்கெல்லாம் உண்டியும் உடையும் உறையுலும்
- அல்லது கண்டது இல்லென காவலன் உரைக்கும்.’

**பிற செய்திகள்**

- மணிமேகலை பிறந்த ஊர் – பூம்புகார்.
- மணிமேகலை மறைந்த ஊர் – காஞ்சிபுரம்.
- கோவலனின் குலதெய்வம் மணிமேகலை அதனால் மணிமேகலைக்கு அப்பெயர் இடப்பட்டது.
- இரட்டைக் காப்பியத்தில் கிளைக் கதைகள் மிகுந்த நூல் மணிமேகலை.
- இரட்டைக் காப்பியத்துள் பிற மொழி கலப்பு மிகுந்த பிறமொழிச் சொற்களை இந்நூலாசிரியர் அதிகமாக பயன்படுத்தி உள்ளார்.
- சிலப்பதிகாரத்தின் இறுதியில் ‘மணிமேகலை மேல் உரை பொருள் முற்றிய சிலப்பதிகாரம் முற்றும்’ எனக் கூறப்படுவதால் சிலப்பதிகாரத்தின் தொடர்ச்சியாகவே இந்நூல் அமைந்துள்ளது.
- மணிமேகலையை சாத்தனார், இளங்கோவடிகள் முன்னிலையில் அரங்கேற்றினார்.
- கதைத்தலைவியின் பெயரால் அமைந்த முதல் காப்பியம் மணிமேகலை.
- தொல்காப்பியர் கூறிய எட்டு அணிகளுடன் மடக்கணி, சிலேடையணி இரண்டையும் பயன்படுத்திய முதல் காப்பியம் மணிமேகலை.


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

- திருவள்ளுவரை பொய்யில் புலவன் எனவும், திருக்குறளைப் பொருளுரை என்றும் முதலில் கூறிய காப்பியம்.

**நூலாசிரியர் பற்றிய வாழ்க்கை குறிப்பு**

| | |
|---|---|
| **ஆசிரியர்** | சீத்தலை சாத்தனார் |
| **இயற்பெயர்** | சாத்தன் |
| **பிறந்த ஊர்** | திருச்சிராப்பள்ளியைச் சார்ந்த 'சீத்தலை' |
| **வாழ்ந்த ஊர்** | மதுரை |
| **தொழில்** | கூலவாணிகம் (கூலம் – தானியம்) |
| **காலம்** | கி.பி. இரண்டாம் நூற்றாண்டு |
| **சமகாலப் புலவர்** | இளங்கோவடிகள் |
| **சமயம்** | பௌத்தம் |
| **சிறப்பு பெயர்கள்** | தண்டமிழ் ஆசான், சாத்தன்<br>நன்னூற் புலவன் (இளங்கோவடிகள் பாராட்டியது) |

**இந்நூலில் கூறப்பட்டுள்ள மூன்று கருத்துகள்:**

- இளமை நிலையாமை, யாக்கை நிலையாமை, செல்வம் நிலையாமை

**உரைகள்**

- மணிமேகலையின் முதல் 26 காதைகளுக்கு ந.மு.வேங்கடசாமி நாட்டரும்,
- இறுதி 4 காதைகளுக்கு ஔவைத் துறைசாமி பிள்ளையும் உரை எழுதி உள்ளனர்.

**<u>சேரன்செங்குட்டுவன்</u>**

கண்ணகிக்காக கோயில் கட்டுவதற்கு இமயத்திலிருந்து கல்லெடுத்து வந்தார். வட இந்திய மன்னர்களான கனக, விசயர்கள் மீது போர் தொடுத்து வெற்றி கண்டு அவர்கள் தலை மீது கல்லை சுமக்க வைத்துக் கொண்டு வந்து பத்தினி தெய்வத்திற்கு கோயில் கட்டினார். கோயில் அமைந்துள்ள இடம் திருவஞ்சிக்களம் ஆகும்.

## 3. சீவகசிந்தாமணி

- இந்நூல் சீவகன் என்னும் அரசனின் வரலாற்றை விவரித்து கூறுவதால் 'சீவகசிந்தாமணி' என்னும் பெயர் பெற்றது.
- சிந்தாமணி தேவர் உலகத்தில் உள்ள ஒப்பற்றதோர் மணி என்பர்.அது வேண்டுவோர்க்கு வேண்டுவன – வற்றையெல்லாம் தரவல்லது. அந்த மணியை போல், இந்நூலும் அறிஞர் வேண்டும் பொருள்களை எல்லாம் தர வல்லது ஆதலின் இப்பெயர் பெற்றது என்பர்.
- நெஞ்சின் கண் பொதிந்து வைத்ததற்குரிய சிறப்புடைய ஒரு மணி என்பதால் இப்பெயர் பெற்றது என்பர்.
- மேலும் சீவகனை பெற்ற தாயாகிய விஜயை அவனைச் சீராட்டும் போது சிந்தாமணியே என்றும் அன்புடன் அழைத்தமையால் அப்பயரே சிந்தாமணி என நூல் பெயரால் அமைந்தது என்றும் கூறுவர்.

**நூலின் வேறு பெயர்கள்**

- சீவகன் எட்டு பெண்களை மணந்து இன்புற்று வாழ்ந்த மண நிகழ்ச்சிகளை சுவைபட விளக்குவதால் இது மன நூல் எனவும் வழங்கப்படும்.
- முக்தி நூல்
- காம நூல்
- மறை நூல்
- முடி பொருள் தொடர்நிலை செய்யுள் (அடியார்க்கு நல்லார்)
- இயற்கை தவம், முதல் விருத்தப்பா காவியம், (விருத்தாபாவினால் அமைந்த முதற்பெருங்காப்பியம்), சிந்தாமணி தமிழ், இலக்கிய நந்தாமணி.

**நூல்அமைப்பு முறை**

| | |
|---|---|
| பாவகை | விருத்தப்பா |
| இலம்பகம் (பிரிவு) | 13 |
| பாடல்கள் | 3145 |
| முதல் இலம்பகம் | நாமகள் இலம்பகம் |
| இறுதி இலம்பகம் | முக்தி இலம்பகம் |


www.tnpscgroup4.in

**பிற செய்திகள்**

- சைவரான அநபாயச் சோழன் விரும்பி கற்ற காப்பியம்.
- உ.வே.ச பதிப்பித்த முதல் காப்பியம்.
- கிறிஸ்துவரான ஜி.யு.போப் இந்நூலை தமிழில் உள்ள இலக்கியச் சின்னங்களில் மிக உயர்வானது. தமிழ் மொழியின் இலியதும், ஒடிசியமான புதிய பெரிய இக்காப்பியம் உலக பெருங்காப்பியங்களில் ஒன்று என பாராட்டி உள்ளார்.
- இந்நூல் செந்தமிழ் காப்பியங்களில் சிறந்தது மட்டுமன்று, உலக மகா காவியங்களில் ஒன்றாகும் எனர் ஜி போப் பாராட்டி உள்ளார்.
- இந்நூல் மதுரை பாண்டிய மன்னன் அவையில் அரங்கேற்றப்பட்டது. திருத்தக்க தேவர் இந்நூலுக்கு 'சிந்தாமணியின் சரிதம்' என்றே பெயரிட்டார்.
- வடமொழியில் உள்ள க்ஷத்திர சூடாமணி, கத்திய சிந்தாமணி, ஸ்ரீ புராணம் ஆகிய நூல்களில் உள்ள கதையை தழுவி இந்நூல் எழுதப்பட்டது.
- இந்நூல் சமண சமய நூலாகும்.
- இந்நூலை திருத்தக்க தேவர் எட்டே நாட்களில் இயற்றினார்.
- கம்பர் 'சிந்தாமணியிலும் ஓர் அகப்பை முகர்ந்து கொண்டேன்' என்று கூறியுள்ளார்.
- நச்சினார்க்கினியர் சைவராக இருந்தும் சீவக சிந்தாமணிக்கு இருமுறை உரை எழுதியதாக கூறப்படுகிறது. தமிழ் மல்லி நாதசுரி என்றும், 'உச்சிமேற்கொள் புலவர்' என்றும் பாராட்டப்பட்ட நச்சினார்க்கினியர் கொண்டு கூட்டி பொருள் உரைப்பதில் வல்லவர்.

**மேற்கோள்கள்**

✓ 'இவ்வாறாக பிறப்பதுவோ
இதுவோ மன்னற்க்கு இயல் வேந்தே'

✓ 'மெய்வகை தெரிதல் தம்மை
விளங்கிய பொருள்கள் தம்மை
பொய்வகை இன்றித்தேறல் காட்சி
ஐம்பெறியும் வாட்டி
உய்வகை உயிரைத் தேயாது
ஒழுகுதல் ஒழுக்கம், மூன்றும்
இவ்வகை நிறைந்த போழ்தே
இருவினையும் கழியும் என்றான்'.

**நூலாசிரியர் பற்றிய வாழ்க்கை குறிப்பு**

| | |
|---|---|
| **ஆசிரியர்** | திருத்தக்க தேவர் |
| **சமயம்** | சமணம் |
| **காலம்** | 10 ஆம் நூற்றாண்டு எனவும், ஒன்பதாம் நூற்றாண்டு எனவும் மாறுபாடான கருத்துக்கள் உள்ளன. |
| **வேறு பெயர்கள்** | திருத்தகு முனிவர், திருத்தகு மாமுனிவர், தேவர். |
| **இயற்றிய மற்றொரு நூல்** | நரி விருத்தம் |

- இவர் சோழவேந்தர் என்பது உரையாசிரியர் குறிப்பால் அறிய முடிகிறது.
- இவர் வடமொழி மற்றும் தென்மொழிகளில் வல்லவராய் இருந்தார். இளமையிலே துறவு பூண்டு விளங்கினார்.
- இவரைப் பற்றிய குறிப்புகள் ஒரு முறை இவர் மதுரை சென்றிருந்த பொழுது அங்கிருந்த தமிழ் புலவர்கள் சமணத் துறவியர்களுக்கு இன்பப்பொருளில் நூல் ஏற்றும் திறன் இல்லை என்று கூறியதால், அக்கூற்றைப் பொய் ஆக்குவதற்காக இந்நூலை திருத்தக்க தேவர் இயற்றினார்.
- கர்நாடக மாநிலம் சிரவணபெலகுலா கோயில் கல்வெட்டில் உள்ளன.
- வீரமாமுனிவர் திருத்தக்க தேவரை தமிழ் கவிஞர்களுள் இளவரசன் என புகழ்ந்துள்ளார்.

## 4. குண்டலகேசி

| | |
|---|---|
| **ஆசிரியர்** | நாதகுத்தனார் |
| **காலம்** | கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு |
| **பாடல்கள்** | 224 மட்டுமே கிடைத்துள்ளன. |
| **பாவகை** | விருத்தம். இந்நூல் பௌத்த நூலாகும். |
| **நூலின் வேறு பெயர்கள்** | குண்டலகேசி விருத்தம், அகலகவி. |

**பிறச்செய்திகள்**

- சமண சமயத்தை எதிர்த்து எழுந்த நூல் இது.
- புறத்திரட்டு, நீலகேசி உரை முதலியவற்றால் 224 பாடல்கள் கிடைத்துள்ளன.
- தன்னை கொல்ல முயன்ற கணவனை கொன்றுவிட்டு பௌத்த துறவி ஆகிய அச்சமயத்தின் பெருமையை பரப்பிய குண்டலகேசி எனும் வணிகக் குல பெண்ணின் கதையாகும்.

## 5. வளையாபதி

- இந்நூலின் ஆசிரியர் பெயர் அறியப்படவில்லை.
- இந்நூல் ஒன்பதாம் நூற்றாண்டை சேர்ந்தது.
- இந்நூல் சமண, சமய நூலாகும்.
- இந்நூலின் பாவகை விருத்தப்பா ஆகும்.
- இந்நூல் முழுமையாக கிடைக்கவில்லை.72 பாடல்கள் மட்டுமே கிடைத்துள்ளன.
- புகார் நகரில் வாழ்ந்த நவகோடி நாராயணன் என்ற வணிகனின் கதை பற்றி இந்நூல் கூறுகிறது. இலக்கண இலக்கிய உரையாசிரியர்களால் மிகவும் போற்றப்பட்ட நூல்.
- வளையாபதியின் கதையை வைசியபுராணம் கூறுகிறது.
- விருத்தப்பாக்களால் அமைந்துள்ள இந்நூல் கள்ளாமை, கொல்லாமை, பொய்யாமை, இளமை நிலையாமை குறித்து பேசுகிறது.

**ஐஞ்சிறு காப்பியங்கள்**

- பழந்தமிழ் இலக்கியங்களின் தொகுப்பில் அறம், பொருள், இன்பம், வீடு என்கின்ற நால்வகை உறுதிப்பொருளில் ஒன்றோ அல்லது பலவோ குறைந்து காணப்படுவது சிறு காப்பியம் ஆகும்.
- ஐஞ்சிறுங்காப்பியங்கள் அனைத்தும் சமண காப்பியங்கள்.
- ஐஞ்சிறுங்காப்பியங்கள் இலக்கணம் கூறும் நூல் தண்டியலங்காரம்.
- ஐஞ்சிறுங்காப்பியங்கள் என்ற வழக்கத்தை ஏற்படுத்தியவர் சி.வை.தாமோதரன் பிள்ளை.

| நூல் | சமயம் | பா வகை | ஆசிரியர் |
|---|---|---|---|
| சூளாமணி | சமணம் | விருத்தம் | தோலா மொழி தேவர் |
| நீலகேசி | சமணம் | விருத்தம் | அறியப் படவில்லை |
| நாககுமார காவியம் | சமணம் | விருத்தம் | அறியப் படவில்லை |
| உதயணகுமார காவியம் | சமணம் | விருத்தம் | அறியப் படவில்லை |
| யசோதர காவியம் | சமணம் | விருத்தம் | அறியப் படவில்லை. |

**1.சூளாமணி**

- ஜீனசேனர் என்பவர் வடமொழியில் எழுதிய ஸ்ரீ புராணம் எனப்படும்.
- ஆருகத மகாபுராணத்தை தழுவி தமிழில் ஆக்கப்பட்ட நூல் இது.
- ஆசிரியர் : தோழா மொழி தேவர் ஆவார்.
- இயற்பெயர் : வர்த்தமான தேவர்
- காலம் : கி.பி. 10–ம் நூற்றாண்டு
- பாடல்கள் : 2330
- சருக்கம் : 12

**<u>நூலின் பெயர் காரணம்</u>**

- மிகுந்த ஒளியையும், சிறப்பினையும் உடையது சூளாமணி. ஆற்றல்கள், சிறப்புகளும்


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

கொண்டு திவிட்டனும் விசயனும் சூளாமணி போல் ஒளிர்ந்தமையால் இந்நூல் இப்பெயர் பெற்றது.

- ஆசிரியர் இந்நூலுக்கு வைத்த பெயர் செங்கண் நெடியான் சரிதம் ஆகும்.
- இந்நூல் ஆசிரியர் பற்றிய குறிப்புகள் கர்நாடக மாநிலம் சிரவணபெலாகுலாவில் உள்ள கல்வெட்டில் பொறிக்கப்பட்டுள்ளன.
- சுரமை நாட்டின் இளவரசன் திவிட்டன், வித்யாதார நாட்டு இளவரசி மணந்து கொண்டதால் ஏற்பட்ட சிக்கல்களையும், அதனால் திவிட்டன் நிகழ்த்திய வீர செயல்களையும் கூறுகிறது.
- சமண தத்துவங்கள், நான்கு வகையான பிறவிகள், வீடுபேறு ஆகியவை பற்றி இந்நூல் கூறுகிறது. இந்நூல் அவனி சூளாமணி மாறவர்ம பாண்டிய மன்னன் அவையில் அரங்கேற்றப்பட்டது.

**பாராட்டுரைகள்**

- விருத்தப்பாவை கையாள்வதில் இவர் சீவக சிந்தாமணி ஆசிரியரையும் மிஞ்சி விட்டார். **–மு.வரதராசனார்**
- சிந்தாமணியை விட சிறப்பமான நடையை உடையது சூளாமணி **– கி.வா. ஜகநாதன்.**
- சிந்தாமணியிலும் இத்தகைய இனிமை இல்லை **–தெ.பொ.மீ.**

**2. நீலகேசி**

- தமிழில் எழுதப்பட்ட முதலாவது தருக்க நூல்
- குண்டலகேசி என்னும் கௌத நூலுக்கு எதிராக எழுதப்பட்ட நூல்
- ஆசிரியர் பெயர் அறியப்படவில்லை.
- சருக்கம் 10 பாடல்கள் 894 (விருத்தப்பா)

**இந்நூலின் வேறு பெயர்கள்**

நீலகேசி தெருட்டு, நீலம் (யாப்பெருங்கல விருத்தியுரை)

**<u>பெயர் காரணம்</u>**

- நீளம் – கருமை
- கேசம் – கூந்தல்
- நீலகேசி – கரிய கூந்தலை உடையவள்
- இந்நூலுக்கு உரை எழுதியவர் திவாகர வாமன முனிவர்.
- இவரின் உரை சமய திவாகரம் எனப்படுகிறது.
- பழையனூர் நீலியே குண்டலகேசியாகப் பிறந்து பௌத்த சமயமே மேலோங்கியது என உணர்த்துவது குண்டலகேசி காப்பியம்.
- அதே பழையனூர் நீலியே நீலகேசியாகப் பிறந்து குண்டலகேசியை வாதில் வென்று சமணமே உயர்ந்தது என்று நிறுவுவது நீலகேசி காப்பியம்.

**3. நாககுமார காவியம்**

- ஆசிரியர் பெயர்: அறியப்படவில்லை.
- காலம் : கி.பி. 16ஆம் நூற்றாண்டு
- பாடல்கள்: 120 விருத்தப்பா
- சருக்கம்: 5

**<u>பெயர்க்காரணம்</u>**

- கதைத் தலைவன் நாககுமாரன் பற்றி கூறுதவதால் இந்நூல் இப்பெயர் பெற்றது.
- இந்நூலின் வேறு பெயர் நாகபஞ்சமி கதை.
- நாகபஞ்சமி நோன்பின் சிறப்பை இந்நூல் கூறுகிறது.
- இக்கதையின் தலைவன் 519 பெண்களை மணக்கிறான்.


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

- மணத்தையும் போகத்தையும் மிகுதியாகக் கூறும் சமண நூல் இதுவாகும்.

**4. உதயணகுமார காவியம்**

- ஆசிரியர் பெயர் :அறியப்படவில்லை
- காலம் : கி.பி. 15 ஆம் நூற்றாண்டு
- பாடல்கள்: 369
- காண்டம்: ஆறு

**நூலின் வேறு பெயர்** – உதயணன் கதை

- குணாட்டியர் என்பவர் வடமொழியில் எழுதிய 'பிருகத் கதா' என்ற நூலைத் தழுவி தமிழில் **கொங்குவேளிர்** என்பவர் ஏழாம் நூற்றாண்டில் **பெருங்கதை** என்ற நூலை படைத்தார்.
- பெருங்கதை என்ற நூலின் சுருக்க நூலே **உதயணகுமார காவியம்** ஆகும்.
- வத்தவ (வங்கதேச) நாட்டரசன் சதானிகனுக்கும் அவன் மனைவி மிருகாவதிக்கும் பிறந்த உதயணனின் கதையாகும்.
- உதயணனை **விச்சை வீரன்** என்றும் கூறுவர்.
- உதயனின் யாழின் பெயர் **கோடாபதி**

**5. யசோதர காவியம்**

- ஆசிரியர் பெயர் : அறியப்படவில்லை, ஒரு சாரார் வெண்ணாகாலுார் உடையார் வேல் என்று குறிப்பிடுகின்றன
- காலம் : கி.பி. 13– ஆம் நூற்றாண்டு
- பாடல்கள் : 320
- சருக்கங்கள் : ஐந்து
- சமயம் : சமணம்
- பா வகை : விருத்தம்
- வடமொழியில் எழுதப்பட்ட உத்திரபுராணத்தில் இருந்து இதன் கதை எடுக்கப்பட்டது என்றும் புட்பதத்தார் எழுதிய யசோதர சரிதத்தின் தகவல் என்றும் கூறுவர்.
- இந்நூலில் '**மாளவ பஞ்சம்**' எனும் கர்நாடக இசை பற்றி கூறப்பட்டுள்ளது.

**காப்பிய நோக்கம்**

- உயிர் கொலை தீது என்று உணர்த்துவதற்காக இயற்றப்பட்டது. மறுபிறவி, சிற்றின்பத்தின் சிறுமை, பேரின்பத்தின் பெருமை, ஒழுக்கத்தின் உயர்வு ஆகியவை கூறப்பட்டுள்ளன.

**பெருங்கதை**

- குணாட்டியர் என்பவர் பிருகத் கதா என்ற நூலை பைசாச மொழியில் இயற்றினார்.
- இக்காப்பியமே பெருங்கதையின் மூலநூலாக கருதப்படுகிறது.
- வட இந்தியப் பகுதிகளைக் களமாகக் கொண்டு தமிழ் சாயலோடு இயற்றப்பட்ட முதல் தமிழ் காப்பியம் ஆகும்.

| | |
|---|---|
| **ஆசிரியர்** | கொங்கு வேளீர் |
| **நூலின் வேறு பெயர்கள்** | கொங்கு வேல்மாக்கதை<br>உதயனின் கதை |
| **காப்பிய தலைவன்** | உதயணன் |
| **சமயம்** | சமணக்காப்பியம் |
| **காண்டங்கள்** | ஆறு |
| **பா வகை** | ஆசிரியப்பா |

**கம்பராமாயணம்**

- வால்மீகி முனிவர் வடமொழியில் எழுதிய ராமாயணத்தை தழுவி கம்பர் தமிழில் எழுதினார். வால்மீகி முனிவர் எழுதியது முதல் நூல். கம்பர் எழுதியது வழிநூல். இந்நூலுக்கு கம்பராம அவதாரம் என்று பெயரிட்டார்.
- அவதார் என்ற வடச் சொல்லிற்கு மேலிருந்து வந்தது என்று பொருளாகும். ஆனால் பல மொழிகளிலும் ராமாயணம் பலரால் எழுதப்பட்டதால் கம்பரின் பெயரோடு


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

இணைத்து கம்பராமாயணம் என்று அழைக்கப்படுகிறது.

- ➢ கம்பர் ராமாயணத்தை திருவரங்கத்தில் அரங்கேற்றினார். கம்பராமாயணம் பெருங்காப்பியத்திற்குரிய இலக்கணங்களை முழுமையாக பெற்றது.

**நூல் அமைப்பு**

| | |
|---|---|
| காண்டங்கள் | ஆறு |
| படலங்கள் | 123 |
| பாடல்கள் | 10 ஆயிரத்து 589 |
| முதல் படலம் | ஆற்றுப் படலம் |
| இறுதிப் படலம் | விடை கொடுத்த படலம் |

**வேறு பெயர்கள்**

கம்பச்சித்திரம், கம்பநாடகம், தோமறு மாக்கதை, இயற்கை பரிணாமம், இந்நூளில் 96 வகை ஓசை வகைகளை கம்பர் கையாண்டுள்ளார். **'வரமிகு கம்பன் சொன்ன வண்ணமும் தொண்ணுற்றாறே என்று ஒரு கணக்கிடும் உள்ளது'.**

**1) பாலகாண்டம்**

- முதல் படலம் –ஆற்றுப்படலம்
- 24 ஆவது படலம் – பரசுராமா படலம்
- இக்காண்டம் ராமன் பிறப்பு, கல்வி, திருமணம் பற்றி கூறுகிறது

**2) அயோத்தியா காண்டம்**

- முதல் படலம் – மந்திர படலம்
- 13வது படலம் – திருவடி சூட்டு படலம்
- இக்காண்டம் ராமன் சீதையை மனம் புரிந்த பின்னனான வாழ்க்கை, இளவரசனாக அரண்மனையில் வாழ்ந்த வாழ்க்கை பற்றியும், கைகேயின் வரத்தால் ராமன் காடு செல்ல, பரதன் ராமனின் பாதங்களை வைத்து ஆட்சி செய்வது குறித்து கூறுகிறது.

**3) ஆரண்ய காண்டம்**

- முதல் படலம் – விரதான் வதைப்படலம்
- 13–வது படலம் – சவரி பிறப்பு நீங்கு படலம்.
- இக்காண்டம் ராமன் காட்டுக்குச் சென்று அங்கு வாழ்ந்த வாழ்க்கை பற்றியும், சீதையை இராவணன் கடத்திச் கடத்திச் செல்வது பற்றியும் கூறுகிறது.

**4) கிஷ்கிந்தா காண்டம்**

- முதல் படலம்– பம்பை வாவி படலம்
- 17வது படலம்–மகேந்திர படலம்
- இக்காண்டம் வானரர் நாட்டின் வாழ்க்கை குறித்தும், வாலி வதம் குறித்தும் கூறுகிறது.

**5) சுந்தர காண்டம்**

- முதல் படலம் – கடல் தாவு படலம்
- 14வது படலம் – திருவடி தொழுத படலம்
- இக்காண்டம் அனுமனின் தீர செயல்கள், அனுமன் இலங்கை சென்றது குறித்து கூறுகிறது.

**6) யுத்த காண்டம்**

- முதல் படலம்– கடல் கான் படலம்
- 42வது படலம்– திருமுடி சூட்டு படலம்
- இக்காண்டம் ராமன் ராவணயுத்தம் பற்றி கூறுகிறது. ஆறு காண்டங்களிலும் சுந்தரகாண்டமே காப்பியத்தின் மணிமுகுடமாக விளங்குகிறது.

- ➢ அனுமனுக்கு சுந்தரம் என்னும் பெயரும் உண்டு. சிறிய திருவடி என்று அழைக்கப்பட்டவர் அனுமன்.
- ➢ கம்பராமாயணத்தின் தொடர்ச்சியாக ஏழாவது காண்டமாகிய உத்தரகாண்டத்தை ஒட்டகத்தர் எழுதியுள்ளார்.
- ➢ கம்பராமாயணத்தை கம்பர் 15 நாடகங்களில் எழுதி முடித்தார்.
- ➢ கம்பராமாயணத்தில் இடம்பெற்றுள்ள 'இரணியின் வதைப்படலம்' வால்மீகி ராமாயணத்தில் இடம்பெறவில்லை.


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

- ராம+ அயணம் – ராமாயணம். இது வட சொற்பணர்ச்சி: ரகரம். தமிழ் சொல்லின் முதல் எழுத்து ஆகாது ஆகையால் இலக்கண விதிப்படி இகரம் சேர்த்து ராமாயணம் என வழங்க பெற்றது.

**வடசொல் கிளவி வடஎழுத் தொரீஇ**
**எழுத்தோடு புணர்ந்த சொல்லாகும்மே**

**– தொல் எச்சவியல் 5**

வடசொல்லை சொல் பயன்படுத்தும் போது வட எழுத்தை நீக்கி தமிழ்ப்படுத்த வேண்டும் என்னும் தொல்காப்பிய இலக்கணப்படி, ராமன், அனுமன், லக்ஷ்மணன், விபீஷணன் என்னும் பெயர்களை ராமன், அனுமன், இலகுவன், வீடணன் என நெறிப்படுத்திய தமிழ் வேந்தர் கம்பரே! வடமொழி எழுத்தையும் பிற மொழி கலப்பையும் தடுத்தவர் இவரே.

**நூலாசிரியர் பற்றிய வாழ்க்கை குறிப்பு**

| | |
|---|---|
| **பெயர்** | கம்பர் (கம்பர் என்றால் தூண் போன்ற வலிமை உடையவர் என்பது பொருளாகும்.) |
| **தந்தை** | ஆதித்தர் |
| **மகன்** | அம்பிகாபதி |
| **மகள்** | காவேரி |
| **ஊர்** | நாகை மாவட்டத்தில், மயிலாடுதுறைக்கு அருகில் உள்ள தேரழுந்தூர். இது சோழ நாட்டின் பகுதியாகும். |
| **காலம்** | கி.பி. 12ஆம் நூற்றாண்டு |
| **ஆதரித்தவர்** | திருவெண்ணைநல்லூர் சடையப்ப வள்ளல் |
| **இவர் இயற்றிய பிற நூல்கள்** | சடகோபரந்தாதி (நம்மாழ்வார் பற்றியது) ஏரெழுவது, சரஸ்வதி அந்தாதி, திருக்கை வழக்கம், சிலை எழுவது. |
| **சமகாலப் புலவர்கள்** | ஒட்டக்கூத்தர், புகழேந்தி |
| **சிறப்பு பெயர்கள்** | கவிச்சக்கரவர்த்தி, கவிப்பேரரசர், கவிக்கோமான் கம்பநாடு உடைய வள்ளல். |
| **கம்பர் இறந்த இடம்** | நாட்டரசன் கோட்டை. |

இவர் செய்நன்றி மறவா இயல்பினர். தம்மை ஆதரித்த வள்ளல் சடையப்பரை ஆயிரம் பாடல்களுக்கு ஒரு பாடல் விதம் பாடி சிறப்பித்துள்ளார்.

- ✓ **யாமறிந்த புலவர்களில் கம்பனைப் போல்**
  **வள்ளுவனை போல் இளங்கோவை போல்**
  **பூமி இதனில் யாங்குனுமே கண்டதில்லை**
  **– பாரதியார்**
- ✓ **உண்மை வெறும் புகழ்ச்சி இல்லை**
  **– பாரதியார்**
- ✓ **கல்வி சிறந்த தமிழ்நாடு**
  **புகழ் கம்பன் பிறந்த தமிழ்நாடு – பாரதியார்**
- ✓ **'கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவி பாடும்'**
  **'விருத்தமெனும் ஒன்பாவிற்கு உயர்கம்பன்'**
  **'கல்வியில் பெரியார் கம்பர்'**
  **"வீசும் தென்றல் காற்றுண்டு**
  **கையில் கம்பன் கவி உண்டு" – கவிமணி**
- ✓ **'வடமொழி தென்மொழிக் காப்பிய நயங்களாகிய**
  **பொன்மையில் தம் சித்திரக்கோலைத் தோய்த்துத்**
  **தம் காப்பிய ஓவியத்தை கம்ப நாடார் வரைந்தார்' – மு.இராகவையங்கார்**
- ✓ **"கம்பராமாயணம் தனக்கு முதல் நூலான வான்மீகி இராமாயணத்தையே விஞ்சும் சுவையுடைய காப்பியமாகும்" –வ.வே.சு.ஐயர்**

**<u>பிறமொழிகளில் ராமாயணம்</u>**

- ❖ துளசிதாசர் – ஹிந்தி
- ❖ எழுத்தசர் – மலையாளம்
- ❖ கங்குனி – அசாமி
- ❖ பலராம் தாஸ் – ஒரியா

உலகினில் நாகரிகம் முற்றிலும் அழிந்துவிட்டாலும் திருக்குறளும், கம்பன் காவியமும் இருந்தால்போதும், மீண்டும் அதனை புதுப்பித்து விடலாம். **– கால்டுவெல்**

## <u>பெரியபுராணம்</u>



www.tnpscgroup4.in

❖ செயற்கரிய செயல்களை செய்து பெருமை பெற்று 63 சிவனடியார்களின் வரலாற்றையும் தொகையடியார் ஒன்பது பேரின் வரலாற்றையும் இந்நூல் கூறுகிறது.

❖ இந்நூலுக்கு சேக்கிழார் இட்ட பெயர் 'திருத்தொண்டர் புராணம்' ஆகும்.

❖ தொகையடியார் என்பவர்கள் தில்லைவாழ் அந்தணர்கள் ஆவர்.

❖ சுந்தரமூர்த்தி நாயனாரின் திருத்தொண்டகத்தொகை எனும் நூலை முதல் நூலாகக் கொண்டும், சுந்தரமூர்த்தி சுவாமிகளை காப்பிய தலைவராகக் கொண்டும், நம்பியாண்டர் நம்பி அவர்கள் எழுதிய திருத்தொண்டர் திருவந்தாதி ஆகியவற்றை வழிநூலாகக் கொண்டும் பெரியபுராணத்தை சேக்கிழார் இயற்றியுள்ளார்.

| | | |
|---|---|---|
| திருத்தொண்ட தொகை | முதல் நூல் | தொகை நூல் |
| திருத்தொண்டர் திருவந்தாதி | வழி நூல் | வகை நூல் |
| பெரியபுராணம் | சார்பு நூல் | விரிநூல் |

**நூல் அமைப்பு**

❖ பெரியபுராணம் முதல் காண்டம், இரண்டாம் காண்டம் என இரு பிரிவுகளாக அமைந்துள்ளது.

❖ முதல் காண்டம் 5 சருக்கங்கள்

❖ இரண்டாம் காண்டம் 8 சருக்கங்கள்

❖ திருத்தொண்டத் தொகையில் இடம் பெற்றுள்ள பாடல்களின் முதல் வரியே சருக்கங்களின் பெயர்களாக அமைந்துள்ளன.

❖ காப்பியக் கதையானது கயிலாயத்தில் தொடங்கப்பெற்று, சைவ அடியார்களின் வாழ்க்கையை விவரித்து, இறுதியாக கயிலாயத்தில் முடிகிறது.

❖ 'உலகெலாம்' என்ற சொற்றொடரில் தொடங்கி 'உலகெலாம்' என்ற சொற்றொடரில் இந்நூல் முடிவடைகிறது.

**முதல் செய்யுள்**

உலகலாம் உணர்ந்து ஓதற்கு அறியவன்;
நிலவு லாவிய நீர்மலி வேணியன்;
அலகில் சோதியன்; அம்பலத்து ஆடுவான்
மலர்சி லம்பாடி வாழ்த்தி வணங்குவோம்'

**இறுதிச் செய்யுள்**

'என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித்து உள்ளமும் ஓங்கிட
மன்று ளாரடி யாரவர் வான்புகழ்
நின்ற தெங்கும் நிலவி உலகெலாம்'

❖ இந்நூல் 12–ம் திருமுறையாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

❖ 4286 செய்யுள்களை கொண்ட போரானது **'ஆளுடையப்பிள்ளை'** எனப்படும் திருஞானசம்பந்தரின் வரலாறு மட்டும் 1256 செய்யுட்களால், விரிவாகப் பாடப்பட்டுள்ளதால் 'பிள்ளை பாதி: புராணம் பாதி' என்கிற பழமொழி ஏற்பட்டது.

**நூலாசிரியர் பற்றிய வாழ்க்கை குறிப்பு**

| | |
|---|---|
| **ஆசிரியர்** | சேக்கிழார் |
| **இயற்பெயர்** | அரண்மொழித்தேவர் |
| **தந்தை** | வெள்ளியங்கிரி |
| **தாயார்** | அழகாம்பிமை |
| **சகோதரர்** | பாலவராயர் |
| **குலம்** | வேளாளர் |
| **பிறந்த ஊர்** | குன்றத்தூர் (காஞ்சிபுரம் மாவட்டம்) |
| **காலம்** | கி.பி. 12ஆம் நூற்றாண்டு |
| **தொழில்** | இரண்டாம் குலோத்துங்கச் சோழனின் (அநபாயச் சோழன்) தலைமை அமைச்சராக பணி புரிந்தார். |
| **சிறப்பு பெயர்கள்** | உத்தமசோழப் பல்லவர், தொண்டர் சீர் பரவுவார், தெய்வச் சேக்கிழார் |

**காப்பிய நோக்கம்**

❖ அநபாயச் சோழன் **'சீவகசிந்தாமணி'** என்ற காமரசம் அதிகம் உள்ள சமண நூலை படிப்பதனால், மன்னனை நல்வழிப்படுத்தவும், மக்களுக்கு அடியார்களின் வரலாற்றை எடுத்தியம்பவும், இந்நூலை இயற்றினார்.

❖ உமாவதி சிவராச்சாரியார் என்பவரால் சேக்கிழார் புராணம் என்ற நூலும், மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களால்

'**சேக்கிழார் பிள்ளைத்தமிழ்**' என்ற நூலும் சேக்கிழாரை முன்வைத்து இயற்றப்பட்டு உள்ளன.

**சேக்கிழார் இயற்றிய பிற நூல்கள்**

- திருத்தொண்டர் புராண சாரம்
- திருப்பதிகக் கோவை
- சிவபெருமானுக்காக கற்கோயில் ஒன்றை எழுப்பியுள்ளார்.

**பாராட்டுரைகள்**

- 'பக்திச் சுவை நனி சொட்ட சொட்ட பாடிய கவி வலவ' என்று சேக்கிழாரை மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் புகழ்ந்து பாடியுள்ளார்.
- 'உலகம், உயிர், கடவுள் ஆகிய மூன்றையும் ஒருங்கே காட்டும் காவியம் பெரியபுராணம்' என்று இந்நூலை திரு.வி.கல்யாண சுந்தரனார் அவர்கள் பாராட்டியுள்ளார்.

## திருவிளையாடற் புராணம்

- கந்தபுராணத்தின் ஒரு பகுதியான ஆலாசிய மான்மியத்தை அடிப்படையாகக் கொண்டு திருவிளையாடற்புராணம் இயற்றப்பட்டது.

| | |
|---|---|
| காண்டம் | 3 |
| பாவகை | விருத்தப்பா |
| மதுரைக் காண்டம் | 18 படலங்கள் |
| படலம் உட்பிரிவு | 64 |
| திருவாலவாய்க் காண்டம் | 16 படலங்கள் |
| பாடல்கள் | 3363 |
| கூடற் காண்டம் | 30 படலங்கள் |

- இந்நூலுக்கு பண்டிதமணி நாமும் வெங்கடசாமி உரை எழுதியுள்ளார்.

**நூலாசிரியர் பற்றிய வாழ்க்கை குறிப்பு**

| | |
|---|---|
| ஆசிரியர் | பரஞ்சோதி முனிவர் |
| தந்தை | மீனாட்சி சுந்தர தேசிகர் |
| பிறந்த ஊர் | திருமறைக்காடு (நாகை மாவட்டத்தில் உள்ள வேதாரண்யம்) |
| சிறப்பு | தமிழிலும், வடமொழியிலும் புலமைப் பெற்றவர் |
| இயற்றிய பிற நூல்கள் | திருவிளையாடற் போற்றி கலிவெண்பா, மதுரைப் பதிற்றுப்பத்தந்தாதி, வேதாரண்ய புராணம் |
| காலம் | கி.பி.16–ஆம் நூற்றாண்டு |

**நூல் பிறந்த வரலாறு**

- பரஞ்சோதி முனிவர் துறவியாகி சிவாலயங்கள் தோறும் சென்று இறைவனை வழிபட்டு வந்தார்.
- அவ்வாறு, மதுரை நகரினை அடைந்து மீனாட்சியம்மனையும், சோமசுந்தரக் கடவுளையும் வணங்கியவர், அந்நகரிலேயே சில காலம் தங்கி இருந்தார். அந்நகரத்தார் அவரைக் கேட்டுக் கொண்டதற்கு இணங்க திருவிளையாடற் புராணத்தை ஏற்றினார்.
- இந்நூலை சிவபெருமான் திருக்கோயிலின் எதிரே உள்ள அறுகால் பீடத்திலிருந்து தென்மொழி, வடமொழி புலவர் யாவரும் போற்ற அரங்கேற்றினர்.
- இந்நூலின் முதல் 343 செயல்களில் காப்பு, மதுரை மாநகர சிறப்புகள் பற்றி கூறப்பட்டுள்ளது.
- 344 வது செய்யுளிலிருந்து சிவபெருமானின் திருவிளையாடல் கூறப்பட்டுள்ளது. இறைவனின் 64 திருவிளையாடல்களை விளக்கி எழுந்த நூல்களுள் இது சிறப்பானதாகும்.

- இறைவன் தருமிக்கு அருளிய பாடலாக இன்னுயிர் கூறப்பட்டுள்ள பாடல் குறுந்தொகையில் இடம்பெற்றுள்ளது. அப்பாடல்

**"கொங்கு தேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி**
**காமம் செப்பாது கண்டது மொழிமோ**
**பயிலியது கெழீ இய நட்பின் மயிலியல்**
**செறியெயிற் றரிவை கூந்தலின்**
**நறியவும் உளவோ நீ அறியும் பூவே"**

**– இறையனார்**

**நூலின் பெருமையை விளக்கும் தொடர்**

- ✓ சிவபெருமானின் வலக்கண் –பெரியபுராணம்


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

- ✓ சிவபெருமானின் இடக்கண் – திருவிளையாடற்புராணம்
- ✓ சிவபெருமானின் நெற்றிக்கண்– கச்சியப்ப சிவாச்சாரியாரின் கந்தபுராணம்

## தேம்பாவணி

| | |
|---|---|
| தேம்பாவணி | தேம்பா+ அணி (வாடாத மாலை எனப் பொருளாகும்) |
| தேம்பாவணி | தேன்+ பா+ அணி (தேன் போன்ற பாடலை அணியாக உடைய நூல் என பொருளாகும்). |
| நூலின்தலைவன் | இயேசு பெருமானின் வளர்ப்புத் தந்தையான சூசை மாமுனிவர். |
| காண்டங்கள் | 3 |
| படலங்கள் | 36 ஒவ்வொரு காண்டத்திற்கும் 12 படலங்கள் |
| பாடல்கள் | 3615 |

தேம்பாவணி ஒரு வழி நூலாகும். கி.பி. 1665– இல் ஸ்பானிய நாட்டில் வாழ்ந்த ஆகிர்த மேரி என்ற பரிசுத்த கன்னி இயற்றிய **தேவமாதாவின் வரலாறு** என்ற நூலை தழுவி இயற்றப்பட்டமையால் இது வலிநூல் எனப்படுகிறது.

### நூலாசிரியர் பற்றிய வாழ்க்கை குறிப்பு

| | |
|---|---|
| **ஆசிரியர்** | வீரமாமுனிவர் |
| **இயற்பெயர்** | கான்ஸ்டாண்டின் ஜோசப் பெஸ்கி |
| **தந்தை** | கொண்டல்போ பெஸ்கி |
| **தாய்** | எலிசபெத் |
| **பிறந்த ஊர்** | இத்தாலி நாட்டில் உள்ள காஸ்த்திக் கிளியோனே |
| **காலம்** | 1680 – 1747 |
| **அறிந்த மொழிகள்** | இத்தாலியம், லத்தீன், கிரேக்கம், எபிரேயம், தமிழ், தெலுங்கு, சமஸ்கிருதம் |
| **தமிழ் கற்பித்தவர்** | மதுரை சுப்ரதீபக் கவிராயர் |
| **சிறப்பு** | முப்பதாவது அகவையில் தமிழகம் வந்து தமிழ் பயின்று காப்பியம் படைத்தமை |
| **இயற்றிய நூல்கள்** | ஞான உபதேசம், பரமார்த்த குரு கதை, சதுரகராதி, திருக்காவலூர் கலம்பகம், தொன்னூல் விளக்கம், கித்தேரியம்மாள் அம்மானை, வேதியர் ஒழுக்கம், செந்தமிழ் இலக்கணம் கொடுந்தமிழ் இலக்கணம். |

- ➢ திருச்சியை ஆண்ட மன்னர் சந்தா சாகிப்புடன் உரையாடுவதற்காக வீரமாமுனிவர் இரண்டே மாதங்களில் உருது மொழியை கற்றுக்கொண்டார்.
- ➢ இவருக்கு இஸ்மத் சன்னியாசி என்ற பட்டத்தை சந்தாசாகிப் வழங்கினார். இதன் பொருள் தூய துறவி என்பதாகும்.

### நூல் குறிப்பு

- ➢ இந்நூலின் காப்பிய தலைவரான ‘வளன் என்னும் சூசை மாமுனிவர்’ தாவீது மன்னனின் அரச மரபில் தோன்றிய வரலாற்றை இந்நூல் உரைக்கிறது.
- ➢ யோசேப்பு என்றும், சூசை என்றும் மொழிபெயர்க்கப்பட்ட ஜோசப் என்னும் பெயரை வீரமாமுனிவர் வளன் என்று தமிழ்ப்படுத்தியுள்ளார்
- ➢ வளங்களை வளரச் செய்பவன் என்னும் கருத்திற்றான் எபிரேய மொழியில் ‘சூசை’ என்ற பெயர் வழங்குகிறது. அதன் நேரிய மொழிபெயர்ப்பாகவே ‘வளன்’ என்ற பெயரை வீரமாமுனிவர் இட்டு வழங்கியுள்ளார்.

## சீறாப்புராணம்

| | |
|---|---|
| **சீறா** | வாழ்க்கை |
| **புராணம்** | வரலாறு |
| **சீறாப்புராணம்** | நபிகள் நாயகத்தின் வாழ்க்கை வரலாறு |
| **காண்டங்கள்** | 1. விலாதத்துக் காண்டம் (பிறப்பியற் காண்டம்),<br>2. நுபுவ்வத்துக் காண்டம் (செம்பொருட் காண்டம்),<br>3. ஹிஜ்ரத்துக்குக் காண்டம் (செலவியற் காண்டம்) |
| **படலங்கள்** | 92 |
| **பாடல்கள்** | 5027 விருத்தப் பாடல்கள் |
| **விளாதத்துக் காண்டம்** | பெருமானார் பிறப்பு, இளமை நிகழ்வுகள் மற்றும் திருமணம் ஆகியவை கூறப்பட்டுள்ளன. |
| **நுபுவத்துக் காண்டம்** | வானவர் ஜிப்ராயில் மூலம் நபிகள் நாயகத்திற்கு திருமுறை அருளப்பட்டதும், அதன் பின் |


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

| | |
|---|---|
| | மெக்காவில் நடந்தவையும் கூறப்பட்டுள்ளன. |
| **ஹிஜ்ரத்துக்குக் காண்டம்** | மெக்காவை விட்டு மதினா சென்றதும், தீன் நிலை நிறுத்தற்காக நிகழ்ந்த போர்களும் பிறவும் கூறப்பட்டுள்ளன. |

### காப்பிய நோக்கம்

- ராமநாதபுரத்தின் மன்னர் சேதுபதியின் அமைச்சராக இருந்தவர் அப்துல் காதிர் என்ற சீதக்காதி மரைக்காயர்.
- அவரின் வேண்டுகோளின் படி, உமறுப்புலவர் சீறாபுராணத்தை எழுதத் தொடங்கினார். ஆனால் நூல் முடிவடையும் முன்பு சீதக்காதி மறைந்தார். அவருக்கு பின் அபுல்காசிம் என்ற வள்ளலின் உதவியால் சீறாப்புராணம் நிறைவுற்றது.
- உமறுப்புலவர் மேற் சொன்ன இரு வள்ளல் பெருமக்களை நூலில் பல இடங்களில் நினைவு கூர்ந்து போற்றுகிறார்.
- சீறாப்புராணத்தில் நபிகள் நாயகத்தின் வாழ்வு முற்றிலுமாக பாடி நிறைவு செய்யப்படவில்லை.
- பனு அகமது என்பவர்தான் பெருமானாரின் தூய வாழ்வு முழுமையும் பாடி முடித்தார். அந்நூல் ‘சின்னச்சீறா’ என அழைக்கப்படுகிறது.

### நூலாசிரியர் பற்றிய வாழ்க்கை குறிப்பு

| | |
|---|---|
| ஆசிரியர் | உமரப் புலவர் |
| தந்தை | செய்கு முகமது அலியார் |
| ஊர் | தூத்துக்குடி மாவட்டம் நாகலாபுரம் |
| காலம் | கி.பி. 1642 முதல் கி.பி. 1703 |
| தமிழாசிரியர் | கடிகைமுத்துப் புலவர் |
| பணி | எட்டயபுர அரசவைப் புலவர் |
| இயற்றிய பிற நூல் | முதுமொழிமாலை (80 பாக்கள்), சீதக்காதி நொண்டி நாடகம் |

## நளவெண்பா

- நளவெண்பா என்பது ‘நளனது வரலாற்றை வெண்பாக்களால் கூறும் நூல்’ என பொருள் தரும்.
- மகாபாரதத்தில் கூறப்படும் கிளைக் கதைகளில் ஒன்றான நிடத நாட்டு மன்னன் நளனின் வரலாறு ஆகும். நளன் வாழ்க்கை பாரத மகாபாரத்திற்கு முந்தைய காலகட்டமாகும்.

| | |
|---|---|
| **காண்டகங்கள்** | 3 |
| **வெண்பாக்கள்** | 405 |
| **பாயிரம்** | 01 – 13 வெண்பாக்கள் |
| **சுயம்வரகாண்டம்** | 14 முதல் 168 வெண்பாக்கள் |
| **கலித்தொடர்க் காண்டம்** | 169 முதல் 316 வெண்பாக்கள் |
| **கலி நீங்க காண்டம்** | 317 முதல் 405 வெண்பாக்கள் |

### நூலாசிரியர் பற்றிய வாழ்க்கை குறிப்பு

| | |
|---|---|
| **ஆசிரியர்** | புகழேந்தி புலவர் |
| **பிறந்த ஊர்** | தொண்டை நாட்டின் பொன்விளைந்த களத்தூர் (காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள பெருங்குளத்தூர்) |
| **சிறப்பு** | வரகுண பாண்டியனின் அவை புலவர் |
| **காலன்** | கி.பி. 12 –ஆம் நூற்றாண்டு |
| **ஆதரித்த வள்ளல்** | சந்திரன் சுவர்க்கி |
| **சமகாலப்புலவர்கள்** | கம்பர், ஒட்டக்கூத்தர் |
| **சிறப்பு பெயர்** | வெண்பாவிற் புகழேந்தி |

- பாண்டியனின் மகளை சோழன் மணந்ததால் பாண்டியன் பெரும் சீர்களோடு பெருமை வாய்ந்த புலவர் புகழேந்தியையும் சீராக சோழன் அவைக்கு அனுப்பி வைத்தார். அது முதல் புகழேந்தி சோழன் அவையை அலங்கரித்தார்.
- வெண்பா யாப்பில் காப்பிய பொருளை தொடர்நிலைச் செய்யுள்களாய்ப் பாடிய சிறப்பினால், இவர் ‘வெண்பாவிற் புகழேந்தி’ எனப் போற்றப்படுகிறார்.

## இரட்சணிய யாத்திரிகம்

### நூல் குறிப்பு

- இரட்சிணிய யாத்திரிகம் என்பதன் பொருள் – உயிர், தன்னைக் காக்க வேண்டி இறைவனை நோக்கி செல்லும் பயணம் என்பதாகும்.

- ஆன்ம ஈடேற்றத்தை விரும்புபவர் என்ற பொருளும் இதற்கு பொருந்தும்.
- 'ஜான்பன்யன்' என்னும் புகழ்பெற்ற ஆங்கில நூலாசிரியர் இயற்றிய 'பில்கிரிம்ஸ் புரோகிரஸ்' எனும் நூலைத் தழுவி, ஹென்றி ஆல்பர்ட் கிருட்டிணனார் வழி நூலாக தமிழில் இரட்சிணிய யாத்திரிகம் என்னும் பெயரில் இயற்றினார்.

**நூல் அமைப்பு**

- இரட்சிணிய யாத்திரிகம் பெருங்காப்பியமாகும்.
- இந்நூல் ஆதி பருவம், குமார பருவம், நிதானப்பருவம், ஆரண்ய பருவம், இரட்சணிய பருவம் என்ற ஐந்து பருவங்களைக் கொண்டது
- இந்நூலில் 3800 செய்யுள்கள் உள்ளன

**நூலாசிரியர் பற்றிய வாழ்க்கை குறிப்பு**

| | |
|---|---|
| **ஆசிரியர் பெயர்** | ஹென்றி ஆல்பர்ட் கிருஷ்ணா |
| **தந்தை பெயர்** | சங்கரநாராயணர் |
| **தாயார் பெயர்** | தேவனாகி அம்மாள் |
| **பிறந்த ஊர்** | கறையிருப்பு (திருநெல்வேலி மாவட்டம்) |
| **வாழ்ந்த ஊர்** | ரெட்டியார்பட்டி |
| **காலம்** | கி.பி. 1827 முதல் 1900 வரை |
| **பெயர் மாற்றம்** | தனது 30–வது அகவையில் எச்.ஏ.கிறிஸ்டினானர் என மாற்றிக் கொண்டார் |
| **இவருக்கு கற்பித்த ஆசிரியர்கள்** | 1. தமிழ் இலக்கியங்கள் – இவருடைய தந்தை<br>2. இலக்கணங்கள் – மாணிக்கவாசகர் தேவர்<br>3. வடமொழி – பிளவன ஜோதிடர் |
| **பணி** | சாயர்புரம் பள்ளியில் தமிழ் ஆசிரியராக பணியாற்றினார் |
| **இவர் இயற்றிய நூல்கள்** | இரட்சிணிய யாத்ரிகம், இரட்சணிய சமய நிர்ணயம், இரட்சிணிய மனோகரன், இரட்சணிய குரல் |
| **சிறப்பு பெயர்** | கிருத்துவ கம்பர் |

- திருநெல்வேலியில் இருந்து வெளிவந்த **'நற்போதகம்'** என்னும் ஆன்மிக இதழில் இரட்சணிய யாத்திரிகம் 13 ஆண்டுகள் தொடராக வெளிவந்தது. இந்நூல் 1894 – ஆம் ஆண்டு மே திங்களில் முதல் பதிப்பாக வெளியிடப்பட்டது.

## மனோன்மணியம்

- பாண்டிய நாட்டு மன்னனாகிய சீவகவழுதியின் மகள் மனோன்மணியின் வரலாற்றை கூறும் நாடக நூலாகும்.
- இந்நாடகம் லிட்டன் பிரபு என்பார் ஆங்கிலத்தில் எழுதிய 'இரகசிய வழி' என்ற நூலை தழுவி அமைந்தது.
- இது வழி நூலாயினும் முதல் நூல் என கூறத்தக்க அளவு சிறப்புடையது.
- அங்கங்களையும், காட்சிகளையும் அமைத்து எழுதுவது நாடக நூலின் மரபாகும்.
- இந்நூல் 5 அங்கங்களையும் 20 காட்சிகளையும் கொண்டுள்ளது. இடையே 'சிவகாமி சரிதம்' என்ற துணைக் கதை ஒன்றும் இடம்பெற்றுள்ளது.
- பெரும்பாலும் ஆசிரியப்பாக்களால் ஆனது. இஃது இன்பியல் முடிவை கொண்டது.

**நூல் ஆசிரியர் வரலாறு**

| | |
|---|---|
| **பெயர்** | பெ.சுந்தரம்பிள்ளை |
| **பெற்றோர் பெயர்** | பெருமாள் பிள்ளை – மாடத்தி அம்மன் |
| **ஊர்** | ஆலப்புழை (கேரளம்) |

- இவர் திருவனந்தபுரம் அரசர் கல்லூரியில் பயின்றில் பி.ஏ. பட்டம் பெற்றார். பின்பு நெல்லையில் ஓர் உயர்நிலைப் பள்ளியில் தலைமை ஆசிரியராக பணி புரிந்தார். அப் பொழுது கோடகநல்லூர் சுந்தர முனிவரை ஞான ஆசிரியராக கொண்டு தத்துவ ஆராய்ச்சி ஈடுபட்டு அவர் மாணவரானார்.
- இவர் இயற்றிய பிற நூல்கள்– நூல்தொகை விளக்கம், திருஞானசம்பந்தர் கால

ஆராய்ச்சி, திருவிதாங்கூர் பண்டை மன்னர் கால ஆராய்ச்சி.அந்நாளைய சென்னை மாகாண அரசு இவருக்கு ‘ராவ் பகதூர்’ பட்டம் வழங்கி சிறப்பித்தது.

- ‘நீராருங்கடலுடுத்த’ என்ற தமிழ் வாழ்த்துப் பாடல் தமிழக அரசின் தமிழ்த்தாய் வாழ்த்தாக ஏற்கப்பட்டுள்ளது. எம்.ஏ., பட்டம் பெற்று திருவனந்தபுரம் அரசர் கல்லூரியில் தத்துவ பேராசிரியராகத் தொண்டாற்றி தன் 42 –ஆம் வயதில் இவ்வுலக வாழ்வை வாழ்வை நீத்தார்.

## பாஞ்சாலி சபதம்

### நூல் குறிப்பு

- பாரதியாரின் முப்பெரும் படைப்புகளில் ‘பாஞ்சாலி சபதம்’ ஒன்றாகும்.
- இது சூழ்ச்சிச் சருக்கம், சூதாட்டுச் சருக்கம், அடிமை சருக்கம், துகிலுரிதல் சருக்கம், சபதச் சருக்கம் என ஐந்து சருக்கங்களையும், 412 பாடல்களையும் கொண்ட குறுங்காப்பியமாகும்.
- அனைவரும் அறிந்த இதிகாசக் கதையை எளிய சொற்கள், எளிய நடை, எளிய சந்தம் ஆகியவற்றுடன் கூடிய காப்பியமாக தமிழில் பாரதியார் பாஞ்சாலி சபதம் என்ற தலைப்பில் எழுதியுள்ளார்.
- **பெயர்க்காரணம்**
  பாஞ்சால நாட்டு மன்னனின் மகளாகிய பாஞ்சாலி (திரௌபதி) தான் இட்ட சபதத்தை நிறைவேற்றுவது பற்றிய நூலாகையினால் பாஞ்சாலி சபதம் என பெயர் பெற்றது.

### நூலாசிரியர் பற்றிய வாழ்க்கை குறிப்பு

| | |
|---|---|
| **பெயர்** | சுப்பிரமணிய பாரதியார் |
| **தந்தை பெயர்** | சின்னசாமி ஐயர் |
| **தாயார் பெயர்** | லட்சுமி அம்மையார் |
| **பிறந்த ஊர்** | எட்டயபுரம் தூத்துக்குடி மாவட்டம் |
| **வாழ்ந்த காலம்** | 11.12.1882 முதல் 11.9.1921 வரை |
| **ஆற்றிய பணிகள்** | மதுரையில் உள்ள சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியர் பணி சென்னையில் ‘**சுதேசி மித்ரன்**’ பத்திரிக்கையில் துணை ஆசிரியர் பணி ‘**சக்கரவர்த்தினி**’ பத்திரிகையில் ஆசிரியர் பணி **‘இந்தியா’** என்ற வார பத்திரிகையில் ஆசிரியர் பணி. |
| **சிறப்பு பெயர்கள்** | • ‘பாரதியார்’ – பாரதி என்றால் ‘கலைமகள்’ என்பது பொருளாகும்.<br>• தேசியக்கவி<br>• பாட்டுக்கொரு புலவன்<br>• புதுமைக்கவிஞர்<br>• மகாகவி<br>• நீடுதுயில் நீக்கப்பாடிவந்த நிலா, தற்கால இலக்கியத்தின் விடிவெள்ளி. |

**நாட்டுதொண்டு**

இவர் சுதந்திர போராட்டத்தில் கலந்துகொண்டு சிறை சென்றுள்ளார். வெள்ளையர் ஆட்சியின் கீழ் அடிமைப்பட்டு கிடந்த இந்திய மக்களின் உள்ளங்களில் இவரின் பாடல்கள் விடுதலை வேட்கை என்னும் காட்டுத்தீயை மூட்டும் அக்னிக் குஞ்சுகளாய் அமைந்தன.

**சமுதாயதொண்டு**

பெண் விடுதலைக்காகவும், சாதி பேதங்களற்ற சமுதாயத்தை உருவாக்கவும், மூடப்பழக்க வழக்கங்களை அடியோடு ஒழிக்கவும் போராடினார்.

**இலக்கிய தொண்டு**

- பாரதியார் தமிழுக்கு வளம் சேர்க்கும் இலக்கியங்களை படைத்தார்.
- அவருடைய கவிதைகளில் கண்ணன் பாட்டு, குயில் பாட்டு, பாஞ்சாலி சபதம் போன்றவை மிக மிக புகழ்பெற்றவை.

- கீதையை மொழிப் பெயர்த்துள்ளார்.
- ஞானரதம், சந்திரிகையின் கதை, தராசு முதலிய உரைநடை இலக்கியங்களை எழுதியுள்ளார்.

## வில்லிபாரதம்

- வில்லிபாரதம் 10 பருவங்களைக் கொண்டது.
- 4350 விருத்தப் பாடல்களால் ஆனது.
- பாண்டவர்களின் முன்னோர் வரலாறு தொடங்கி, பாண்டவர்– கௌரவ போர் வரையும் நடந்து செல்லும் கதையை வில்லிபுத்தூரார் 10 பருவங்களாக பிரித்து உள்ளார். 10 பருவங்களில் மொத்தம் 50 சருக்கங்கள் அமைந்துள்ளன.

### 10 பருவங்கள் வருமாறு

| | |
|---|---|
| ஆதி பருவம் | 8 சருக்கங்கள் |
| சபாப்பருவம் | 2 சருக்கங்கள் |
| ஆரணிய பருவம் | 8 சருக்கங்கள் |
| பிரடா பருவம் | 5 சருக்கங்கள் |
| உத்தியோக பருவம் | 8 சருக்கங்கள் |
| வீட்டும பருவம் | 10 சருக்கங்கள் |
| துரோண பருவம் | 5 சருக்கங்கள் |
| கண்ணப்பருவம் | 2 சருக்கங்கள் |
| சல்லிய பருவம் | 1 சருக்கங்கள் |
| சவுதிக பருவம் | 1 சருக்கங்கள் |

### நூலாசிரியர் பற்றிய குறிப்புகள்

| | |
|---|---|
| ஆசிரியர் பெயர் | வில்லிபுத்தூரார் |
| தந்தை | வீரராகவர் |
| ஆதரித்த வள்ளல் | வக்கப்பாகையை ஆண்ட வரபதி ஆட்கொண்டான் |
| காலம் | 14– ஆம் நூற்றாண்டு |

- வில்லிபுத்தூரார் திருமுனைப்பாடி நாட்டில் சனியூரில் பிறந்தவர்.
- திருமுனைப்பாடி என்பது இன்றைய உளுந்தூர் பேட்டை பகுதியை உள்ளடக்கியதாகும்.

## இராவண காவியம்

### நூல் குறிப்பு

- இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய தனித்தமிழ் பெருங்காப்பியம் இராவண காவியம். எதிர்நிலை மாந்தராக படைக்கப்பட்ட இராவணனை முதன்மை நாயகனாகக் கொண்டு அமைக்கப்பட்டது.

**இந்நூலின் காண்டங்கள் 5:**

- ✓ தமிழகக் காண்டம்
- ✓ இலங்கைக் காண்டம்
- ✓ விந்தக் காண்டம்
- ✓ பழிபுரிக் காண்டம்
- ✓ போர்க் காண்டம்
- ✓ படலங்கள் – 57
- ✓ பாடல்கள் – 3600

### ஆசிரியர் குறிப்பு

| | |
|---|---|
| **ஆசிரியர்** | புலவர் குழந்தை |
| **பெற்றோர்** | முத்துசாமி – சின்னம்மை |
| **ஊர்** | ஓலவலசு ஈரோடு மாவட்டம் |
| **காலம்** | 1 –07– 1906 முதல் 22–9–1972 வரை |
| **மனைவி** | முத்தம்மை |
| **சிறப்பு** | தம்முடைய பத்தாவது வயதிலேயே கவி பாடும் திறன் பெற்றார். தந்தை பெரியாரின் வேண்டுகோளுக்கு இணங்க 25 நாட்களில் திருக்குறளுக்கு உரை எழுதினார். |
| **பணி** | ஆசிரியராகவும் பின்னர் தலைமை ஆசிரியராகவும் பணியாற்றினார். |
| **படைப்புகள் (34)** | செய்யுள் நூல்கள் 13, உரைநூல்கள் 3, இலக்கண நூல்கள் 3, உரைநடை நூல்கள் 15 |

- ✓ செய்யுள் நூல்களில் முதன்மையானது **'இராவண காவியம்'**.
- ✓ உரைநூல்களில் முதன்மையானது **'திருக்குறள் உரை'**.
- ✓ இலக்கண நூல்களில் முதன்மையானது **'யாப்பதிகாரம்'**.
- ✓ உரைநடை நூல்களில் முதன்மையானது **'தொல்காப்பியர் காலத்தமிழர்'**.
- ✓ 'யாப்பருங்கலக் காரிகை' கற்று கவி பாடுவதில் உள்ள சிரமம் நிறைந்து அதனை முற்றிலும் எளிமையாக்கி யாப்பதிகாரம் எழுதினார்.

- ✓ தொல்காப்பியத்தின் பொருளதிகாரம் முழுமைக்கு எளிய உரை எழுதியுள்ளார்.
- ✓ **இவர் எழுதிய இலக்கண நூல்கள் 3:** யாப்பதிகாரம், தெடையதிகாரம், இன்னூல்.
- ✓ இந்நூல் பவணந்தி முனிவரின் நன்னூல் போன்ற இலக்கண நூற்பாவுடன் அமைந்த நூல்.

இராவண காவியம் காலத்தின் விளைவு. ஆராய்ச்சியின் அறிகுறி. புரட்சிப்பொறி உண்மையை உணர வைக்கும் உன்னத நூல். **– அறிஞர் அண்ணா**

## இயேசு காவியம்

### நூல் குறிப்பு

- ➢ இயேசுவின் வாழ்க்கை வரலாற்றையும், அவரது அறிவுரைகளையும் கூறும் இந்நூலை இயற்றியவர் கவிஞர் கண்ணதாசன் ஆவார்.
- ➢ விவிலியத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட இந்நூல் பாயிரம் நீங்கலாக ஐந்து பாகங்களையும் 149 உட்பிரிவுகளையும் கொண்டுள்ளது.
- ➢ இந்நூலில் பெரும்பறிவு 'பாகம்' எனப்படுகிறது.
- ➢ விருத்தம் என்னும் ஒரே வகை செய்யுளில் அமைந்தவை சீவகசிந்தாமணி, கம்பராமாயணம் பாட்டும், உரைநடையும் கலந்து பல்வகை செய்யுள்களில் அமைந்தது சிலப்பதிகாரம்.
- ➢ 20–ம் நூற்றாண்டில் காப்பிய இலக்கணங்களில் சிலவற்றைப் பின்பற்றி இயற்றப்பட்டவை குறுங்காப்பியம் எனப்படுகின்றன.

| | |
|---|---|
| **முதல் பாகம்** | இயேசு கிறிஸ்துவின் பிறப்பு, அவருடைய வளர்ப்பு பற்றிய செய்திகள் இடம் பெற்றுள்ளன. |
| **இரண்டாம் பாகம்** | இயேசு கிறிஸ்து அருளப்பரிடம் திருமுழுக்கு பெறுதல் மற்றும் சாத்தானால் சோதிக்கப்படுதல் முதலிய செய்திகள் இடம் பெற்றுள்ளன. |
| **மூன்றாம் பாகம்** | இயேசு கிறிஸ்துவின் பொது வாழ்வு மற்றும் அவருடைய நற்செய்திகள் இடம் பெற்றுள்ளன. |
| **நான்காம் பாகம்** | பாடுகள் குறித்து இயேசு கிறிஸ்து முன் அறிவித்தல், இயேசு கிறிஸ்து இவ்வுலகிற்கு வந்ததன் நோக்கம், அவர் உயிர் நீத்தல் முதலியன இடம்பெற்றுள்ளன. |
| **ஐந்தாம் பாகம்** | இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுதல், சீடர்களுக்குக் காட்சியளித்தல், விண்ணகம் செல்லுதல் ஆகிய நிகழ்வுகள் மற்றும் மங்களப் பாடலுடன் காவியம் நிறைவு பெறுகிறது. |

| குறுங்காப்பியங்கள் | ஆசிரியர் |
|---|---|
| பாஞ்சாலி சபதம், குயில் பாட்டு | பாரதியார் |
| பாண்டியன் பரிசு, தமிழச்சியின் கத்தி, இருண்ட வீடு, எதிர்பாராத முத்தம், சஞ்சீவி பர்வதத்தின் சாரல், வீரத்தாய், புரட்சி கவி. | பாரதிதாசன் |
| மருமக்கள் வழி மான்மியம் | கவிமணி |
| ஆட்டனத்தி ஆதிமந்தி, மாங்கனி, இயேசு காவியம் | கண்ணதாசன் |
| பாரத சக்தி மகாகவியம் | கவியோகி சுத்தானந்த பாரதியார் |
| இராவண காவியம் | புலவர் குழந்தை |
| பூங்கொடி, வீரகாவியம் | முடியரசன் |
| சிலம்பின் சிறுநகைப் | சாலை இளந்திரையன் |
| **புதுக்கவிதை வடிவில் இயற்றப்பட்ட காப்பியங்கள்** | **ஆசிரியர்** |
| அவதார புருஷன் (ராமாயணம், பாண்டவர் பூமி (மகாபாரதம்)) | கவிஞர் வாலி |
| கவிராஜன் கதை (பாரதியார் வாழ்க்கை வரலாறு) | கவிஞர் வைரமுத்து |


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in